**பக்கம்.**

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண். 332/2022**

பி.**வா.சா. –2– காயத்திரி**

**நாள்.** 21.08.2025

பி.**வா.சா.2 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பிரதிவதி வெங்கடேசனின் மனைவி ஆவேன். நான் தனியார் கார் நிறுவனத்தில் HR ஆக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பி.வாசா.ஆ.2 கிரையம் பத்திரம் இது தான். அதில் நான் ரூ.1,80,000/– கிரையம் பெற்றதாக சொல்லியுள்ளது என்றால் சரிதான். மேற்படி கிரையமானது ஜீவமணியின் பவர் ஏஜெண்டிடம் தான் கிரையம் பெற்றேன். மேற்படி கிரைய பத்திரத்தில் இதற்குரிய கிரைய தொகை முழுவதும் செலுத்திவிட்டேன் என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தில் கிரைய பாக்கி தொகை பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் மோகன் ராஜிடம் தீர்த்து தான் மேற்படி கிரையம் பெற்றதற்காக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ல் தொகை எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் ரூ.23 லட்சம் கிரையம் பெற்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் கிரைய பத்திரமான ரூ.1,80,000/–ற்கு தான் கிரைய பெற்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பல்வேறு தேதியில் காசோலை மூலமாகவும், வங்கி கணக்கு பரிவர்தனை மூலமாக பணம் செலுத்தியதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால்ச ரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதி கோவிந்தராஜ் காசோலையானது திரும்பி வந்துவிட்டது என்பதால் வழக்கறிஞர் மூலம் நோட்டீஸ் அனுப்பியது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி தொகை மோசடி செய்வதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதியின் மனைவி என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.08.21 20:14:33 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.